வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 578/2020
வழக்குசாட்சி LW14/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத்,<br>ஆய்வாளர்,<br>செங்குன்றம்<br>போக்குவரத்து<br>புலனாய்வு பிரிவு | ஜாதி | |
| கணவர்/தந்தை | வேம்புளி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 55 |

தேதி 17.06.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவேன். கடந்த 04.07.2019 அன்று மாதவரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக ஜவகர் பணிபுரிந்து வந்தபோது காலை 10 மணி திரு.வரதராஜன் அளித்த புகாரினை பெற்று மாதவரம் காவல் நிலைய குற்ற எண். 410/2019 ஆக இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். மேற்படி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.1, 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் எதிரிகளை தேடிவந்த நிலையில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் வரதராஜன், ஆனந்தன், வெங்கட்ரமணன், ஜெகதீசன், தங்கராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தார். பின்னர் பிரதீப், மாடசாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த உடைந்த கண்ணாடி துண்டுகள் (6 துண்டுகளை), கற்கள்–3 அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.,த.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் ஆனது அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் பிரதீப், மாடசாமி ஆகியோர்ளை விசாரணைச் செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்தார். பின்னர் வழக்கு எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்று பகல் 13.30 மணிக்கு மாதவரம் மூலக்கடை சந்திப்பு அருகே 2வது எதிரியை கைதுச் செய்து தேக பரிசோதனை செய்த போது எதிரியிடம் இருந்த குற்ற எண் 392/2019 க்குரிய ஓப்போ செல்போன், கத்தி–1 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கோபிநாத், ராமர் முன்னிலையில் ஒப்புக்கொண்டதால் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமானது பதிவு செய்தார்.

மேற்படி தடய பொருட்களான 392/2019 க்குரியது அந்த குற்ற எண்ணின் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 2வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். 1வது எதிரியை தேடி வந்த நிலையில் 22.09.2020 காலை 12 மணியளவில் மூலக்கடை ஜங்ஷன் அருகே இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கைது செய்து சோதனை செய்த போது அவரிடம் இருந்த இந்த குற்ற வழக்கிற்கு உபயோகித்த கத்தி–1,

ஓப்போ செல்போன்–1 னை மகஜா மூலம் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி அதே சாட்சிகள் முன்னிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவுச் செய்து சாட்சிகளின் சாட்சிகயங்களை தனித்தனியதாக பதிவுச் செய்தார். பின்னர் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார்கள். கைப்பற்றுதல் மகஜரானது அ.த.சா.ஆ.6 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்னர் புலன் விசாரணை அதிகாரி பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால், இவ்வழக்கின் கோப்புகளை மேல் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. நான் விசாரித்த போது சாட்சிகள் அனைவரும் முன்னர் கூறியதையே கூறியதால் மறுவாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை. நான் விசாரித்து இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 397, 506(ii) @ இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 336, 427, 392, 506(ii) கீழ் பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சட்டப்பிரிவு மாற்று அறிக்கையானது அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

சம்பவத்தில் 1 எதிரி மட்டுமே உடனடியாக கைதுச் செய்யப்பட்டார் என்றால் ஆமாம். மற்றொரு எதிரி தாமதமாகவே கைதுச் செய்யப்பட்டார் என்றால் ஆமாம். குற்ற எண். 392/2019 , இக்குற்ற எண்ணிலும் , புகார்தாரர் வேறு வேறு என்றால் ஆமாம். இவ்வழக்கின் சாட்சிகள் நீதிமன்றத்தில் விசாரணைச் செய்யப்படாமல் முடிக்கப்பட்டுள்ளது என்றால் எங்களது விசாரணையில் சாட்சிகள் கொடுத்த முகவரியில் சம்மனானது கொடுக்க முயன்று அவர்கள் அங்கு இல்லாத்தால் திருப்ப்ப்பட்டுள்ளது. மற்றொரு எதிரியை pt warrant மூலம் கைது செய்தோம் என்றால் ஆமாம். சம்பவமே நடக்கவில்லை என்றாலும் எதிரிகள் மீது ஏற்கனவே குற்ற வழக்குகள் இருப்பதால் பொய்யாக

இவ்வழக்கினை பதிவுச் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.
**மறுவிசாரணை இல்லை.**